சார்பு நீதிமன்றம், பல்லடம்.

OS.No 53/2020

| | | |
|---|---|---|
| பிரதிவாதி தரப்பு சாட்சி | : | DW1 |
| பெயர் மற்றும் வயது | : | ராஜேஷ்வரி |
| கணவர் பெயர் | : | நடராஜன் |
| தொழில் | : | |
| கிராமம் | : | |
| தாலுகா | : | பல்லடம் |
| மாவட்டம் | : | திருப்பூர் மாவட்டம். |

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை திரு.க.யுவராஜ்,பி.ஏ.,பி.எல்., சார்பு மற்றும் உதவி அமர்வு நீதிபதி, பல்லடம் அவர்களின் முன்னிலையில் சாட்சிக்கு இந்நீதிமன்ற இரண்டாம் நிலை பெஞ்ச் கிளார்க் அவர்களால் சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது

**பிரதிவாதி தரப்பில் சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை**

எனது தரப்பு முதல் விசாரணையை எழுத்து மூல நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ளது எனது கையெழுத்து தான். நான் சொன்ன விவரங்களை கணினியில் பதிவு செய்து அதனை நான் சரிபார்த்து கையெழுத்து செய்து தாக்கல் செய்துள்ளேன். எனது தரப்பு ஆவணங்களாக

1. சாட்சியின் ஆதார் அட்டை நகல் பி.வா.சா.ஆ 1 ஆகவும்
2. அரசு வழிகாட்டி மதிப்பு பி.வா.சா.ஆ 2 ஆகவும்
3. க.ச. 18 அரசு வழிகாட்டி மதிப்பு பி.வா.சா.ஆ 3 ஆகவும்
4. க.ச. 384 அரசு வழிகாட்டி மதிப்பு பி.வா.சா.ஆ 4 ஆகவும்

**( பி.வா.சா.ஆ. 2 பதிலுரையில் சொல்லப்படவில்லை மேலும் ஆவணமாக தாக்கல் செய்யப்படவில்லை என்றும் பி.வா.சா.ஆ. 3 மற்றும் 4 வழக்கு சொத்திற்கு தொடர்பு இல்லாத ஆவணங்கள் என்றும் மேலும் பதிலுரையில் சொல்லப்படவில்லை என ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது)**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். எனது கணவருக்கு என்ன தொழில் என்றால் விவசாயம் ஆகும். எனக்கும் எனது கணவருக்கும் வங்கியில் கணக்கு உள்ளது என்றால் சரிதான். எனது முதல் மகளுக்கு எந்த தேதியில் திருமணம் ஆனது என்றால் 2017 மாதம் தெரியவில்லை. நான் எனது முதல் மகளுக்கு திருமணத்திற்காக வெளியில் 12 லட்சம் கடன் வாங்கியதாக சொல்லியுள்ள நிலையில் யாரிடம் எவ்வளவு எந்ததேதியில் பணம் வாங்கினேன் என்று குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் அது ஞாபகம் இல்லை. அதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் சொன்னதுபோல் வெளியில் 12 லட்சம் கடன் வாங்கி இருந்தால் நிச்சயம் அதன் விவரங்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் அல்லது பதிலுரையில் சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல.

2. இந்த வழக்கு தேதிக்கு முன்பே என்னையும் என் கணவரையும் பொறுத்த வரை கடன் வாங்கிய வழக்கம் உள்ளது என்றால் சரிதான். பொதுவாக கடன் வாங்குவதற்கு கடனுறுதிச் சீட்டு மற்றும் காசோலை மூலம் கடன் பெற முடியும் என்றால் நான் தெரிந்தவர் மூலம் கடன் வாங்கினேன். அவ்வாறு தெரிந்தவர் மூலம் ஏன் நான் கடன் வாங்கவில்லை என்றால் எனக்கு அவசரமாக கல்யாணத்திற்கு கடன் தேவைப்பட்டது. நான் சொன்னது போல் கடனுக்காக வாதியிடம் பணம் பெற்றிருக்க முடியும் என்றால் கடனுறுதிச் சீட்டு மூலமும் காசோலை மூலமும் கடன் பெற்றிருப்பேன், நிலத்தை விற்க வேண்டி தான் கிரைய ஒப்பந்தம் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரியல்ல. மேற்படி திருமண கடனை தீர்க்க வேண்டி தான் நான் 5 லட்சம் கடன் வாங்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் 5 லட்சம் கேட்டேன், ஆனால் கமிஷன் பிடித்தம் போக 4,50,000 பணம் தான் கொடுத்தார்கள். இதை நான் எனது பதிலுரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

3. நான் ஏற்கனவே 12 லட்சம் கடன் பெற்றதாக சொல்லியுள்ள நிலையில் அதே நபரிடம் சென்று சொத்து பத்திரத்தை அடமானம் வைத்து கடனை ஏன் தீர்க்கவில்லை என்றால் ஒரு தரகர் மூலம் இந்த கடன் எனக்கு கிடைத்தது. ஏன் அதே நபரிடம் சென்று கடன் தீர்க்கவில்லை என்றால் நாங்கள் செய்யவில்லை. நீலமேகம் தரகரை யார் மூலம் தெரியும் என்றால் மற்றொரு தரகர் மூலம் தெரியும், அவர் யார் என்று தெரியாது. நீலமேகம் எவ்வாறு தெரியும் என்று எனது பதிலுரை மற்றும் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி கடன் வாங்கியிருந்தால் அசல் பத்திரத்தை கொடுக்க வேண்டிய தேவை இல்லை என்றால் வாதி கேட்டு வாங்கிக்கொண்டார். நானும் எனது கணவரும் சேர்ந்து தான் வழக்கு சொத்தின் அசல் பத்திரத்தை வருவாய் ஆவணங்களுடன் கொடுத்தோம் என்றால் சரிதான். எங்களது அசல் பத்திரம் வருவாய் துறை ஆவணங்கள் மூலம் தான் கிரைய ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டது என்றால் மேற்படி வாதி என்னிடம் அடமான பத்திரம் என்று சொல்லி தான் தயாரித்தார்.

4. வா.சா.ஆ. 2 கிரைய ஒப்பந்தத்தில் உள்ள எனது கையொப்பம் ஆங்கிலத்தில் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனவே எனக்கு எழுத படிக்க தெரியும் என்றால் சரியல்ல. எனது கணவர் எதுவரை படித்துள்ளார் என்றால் 5 அல்லது 6ம் வகுப்பு வரை படித்துள்ளார். வா.சா.ஆ,2 கிரைய ஒப்பந்ததில் உள்ள எனது கணவரின் கையொப்பம் ஆங்கிலத்தில் உள்ளது என்றால் சரிதான். எனவே எனக்கும் எனது கணவருக்கும் நல்ல படிப்பறிவு உள்ளது என்றால் எனது கணவருக்கு ஓரளவிற்கு எழுத படிக்க தெரியும். நான் எந்த தேதியில் வாதியிடம் கடன் வாங்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு தேதி தெரியாது. நான் வாதியிடம் கடன் பெற்று 2 ஆண்டு காலம் வட்டி செலுத்தியாக சொல்லியுள்ள நிலையில் அதற்கு ஆவணம் எதுவும் உ ள்ளதா என்றால் இல்லை. நானும் எனது கணவரும் மேற்படி கிரைய ஒப்பந்த ஆவணத்தில் எழுதியுள்ள சங்கதிகளை நன்கு படித்து பார்த்து தான் கையொப்பம் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

மேற்படி வா.சா.ஆ 2 கிரைய ஒப்பந்தத்தில் எப்போது கையொப்பம் செய்தோம் என்றால் சார் பதிவாளரிடம் செல்வதற்கு முன்பு கையொப்பம் செய்தோம். எனது கணவர் அப்போது தான் கையொப்பம் செய்தார் என்றால் சரிதான்.

5. நான் சொல்வது தவறு என்றும் நாங்கள் 16.08.2018 ம் தேதி மேற்படி வா.சா–ஆ 2 கிரைய ஒப்பந்ததில் கையொப்பம் செய்து அதன் பிறகு சார் பதிவாளர் முன்னிலையில் 3 நாட்கள் கழித்து 20.08.2018 ம் தேதி கையொப்பம் செய்து ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளது எனவே நிலத்தை விற்க வேண்டி தான் கிரைய ஒப்பந்தம் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. எனவே நான் பதற்றத்தில் சார் பதிவாளர் அலுவலக்ததில் படித்து பார்க்காமல் கையொப்பம் செய்ததாக சொல்லியுள்ளது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. நிலத்தை வாங்க வேண்டி தான் விலலங்கம் போட்டு பார்க்கப்பட்டு கிரைய ஒப்பந்தம் போடப்பட்டது என்றால் சரியல்ல, அடமான பத்திரம் என்று தான் சொன்னார்கள். வழக்கு தாக்கல் செய்தவற்கு முன்பு வாதி இரண்டு சட்ட அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அந்த விவரங்கள் எனக்கும் எனது கணவருக்கும் தெரியும் என்றால் சரிதான்.

6. மேற்படி இரண்டு சட்ட அறிவிப்பிற்கும் நான் பதில் அறிவிப்பு எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. எனது கணவர் தான் சட்ட அறிவிப்பை பெற்றுக்கொண்டார் என்றால் சரிதான். நான் சொன்னது போல் கடனாக தான் பணம் பெற்றிருந்தால் பதில் அறிவிப்பு செய்திருப்பேன் என்றால் நான் நேரடியாக கேட்ட போது ஒரு அத்தாட்சிக்கு தான் சட்ட அறிவிப்பு கொடுத்தாக வாதி சொன்னார். அவ்வாறு நான் நேரடியாக வாதியை சென்று விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு எதுவும் புகார் அல்லது ச ட்ட நடிவக்கை எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. நான் சொன்னது போல் கடனுக்காக பணம் பெறவில்லை அவ்வாறு இருந்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. எனது பதிலுரையில் வ ழக்கு சொத்தில் தறி குடோன், வீடு மற்றும் 100 தென்னை மரங்கள் உள்ளதாக எதுவும் பதிலுரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

7. அதே போல் எனது விசாரணை வாக்குமூலத்தில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, எனவே அவை விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது பதிலுரையில் அரசு வழிகாட்டி மதிப்பு தொடர்பாக எந்த ஆவணமும் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. நான் வாதியிடம் நிலத்தை விற்க வேண்டி தான் கிரைய ஒப்பந்தம் போட்டு முன் தொகை போட்டுள்ளேன். வாதி கிரைய பத்திரத்தை எழுத தயாராக இருந்தும் நான் முன்வரவில்லை எனவே வாதியுள்ள கோரியுள்ள படி பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. வாதியின் மகன் நிதிநிறுவனம் நடத்தி வருவதாக எனது பதிலுரையில் இல்லை

என்றால் சரிதான். வாதி கிரைய பத்திரத்தை எழுத தயாராக இருந்தும் நான் முன்வரவில்லை எனவே வாதியுள்ள கோரியுள்ள படி பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. கிரையம் வாங்க வேண்டி ஒப்பந்தம் போடப்பட்டது எனவே வாதி கோரியுள்ள படி பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. எனது மகளின் வைத்தியத்திற்காகவும் 2 வது மகளின் திருமணத்திற்காகவும் கடன் பெற்றதாக சொன்ன விவரத்தை எனது பதிலுரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வாதி கிரைய பத்திரத்தை எழுத தயாராக இருந்தும் நான் முன்வரவில்லை எனவே வாதியுள்ள கோரியுள்ள படி பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/−)K.Yuvaraj,B.A.,B.L.,

சார்பு நீதிபதி, பல்லடம்.